தரத்தினில் சிறந்த
யானை மார்க்
ஒடுகளையே பாவியுங்கள்
மூ. தா. பொன்னம்பலம்
36,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 23 யாழ்ப்பாணம் | சித்திரை 7 | ஜ-ஆகிர் 3 சனிக்கிழமை | இதழ் 68 19-4-80

RECEIVED PERIODICALS DIVISION LIBRARY

## முதல் தடவையாக 20 ரூபா நோட்டுக்கள்

(கொழும்பு)

மத்திய வங்கி முதல் தடவையாக 20 ரூபா நோட்டுக்களை அடுத்தமாதம் வெளியிடஉள்ளது.

அத்துடன் புதிய 10 ரூபா, 100 ரூபா நோட்டுக்களும் அடுத்த மாதம் வெளியிடப்படும். (இ)

அவசரகால ஆட்சியின்போது

# கடந்த அரசு அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யவில்லை

## ஜனதிபதி ஆணைக்குழுவிடம் சிறிமா மறுப்பு

(கொழும்பு)

**1970 ம் ஆண்டு முதல் 77 ம் ஆண்டுவரை ஆட்சிநடத்திய தமது அரசாங்கம் அவசரகாலச் சட்டம் அமுலிலிருந்த காலப்பகுதியில் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யவில்லை என்று முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஜனதிபதி ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.**

70-ம் ஆண்டு முதல் 77-ம் ஆண்டுவரை ஆட்சி நடத்திய திருமதி பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் அதிகாரங்கள் துஷ்பிரயோகம், மோசடி, ஊழல், அரசியல் பழிவாங்கல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் முன்னாள் அமைச்சர்கள் ஏமற்கொண்ட பதவி நியமனங்களில் ஒழுங்கீனங்கள் இடம் பெற்றதாகவும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்து வரும் ஜனதிபதி ஆணைக்குழுவிடமே திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்ட மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

திருமதி பண்டாரநாயக்காவின் உத்தியோக பூர்வமான இந்த அவரது மறுப்பை வழக்கறிஞர் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தார்.

ஆயுதப்படைகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள், காணிப்பரிமாற்றம் ஆகியவை தொடர்பாக திருமதி பண்டாரநாயக்கா தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் அவர் மறுத்துள்ளார். (இ)

## ரூ. ஒருலட்சம் பீடிப்புகையிலை கடத்தல் முறியடிப்பு

### லொறி, கார் பறிமுதல்; ரூ,12,500 அபராதம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து கடத்தி வந்ததாகக் கருதப்படும் ஒரு லட்சத்து 16 ஆயிரம் ரூபா பெறுமதியான பீடிப்புகையிலை மூடைகளை யாழ். சுங்க அதிகாரிகள் ஓடிக்கொண்டிருந்த லொறியை மறித்துக் கைப்பற்றினர்.

பீடிப்புகையிலையை ஏற்றி வந்த லொறியையும் இச்சம்பவத்துடன் தொடர்புள்ளதாகக் கருதப்படும் கார் ஒன்றையும் சுங்கப்பகுதியினர் பறிமுதல் செய்ததுடன் இக்கடத்தலில் சம்பந்தப்பட்ட ஒருவருக்கு 7,560 ரூபாவும் இருவருக்கு தலா 2,500 ரூபாவும் அபராதம் விதித்தனர்.

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து யாழ் சுங்கத்தடை அதிகாரி திரு. திலக் பெரேரா தலைமையில் சென்ற கோஷ்டியினர் மண்டைதீவுச் சந்தியில் வைத்து 32 பீடிப்புகையிலை மூடைகளுடன்வந்தலொறியை மறித்து சோதனையிட்டபோது இக்கடத்தல் முறியடிக்கப்பட்டது. லொறியைத் தொடர்ந்து வந்த கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

கடத்தல்காரர்கள் யாழ்பதில் சுங்க சேகரிப்பாளர் திரு. சேனரத்ன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே அபராதம் விதிக்கப்பட்டது. (கொ-இ)

## நல்லூரில் கொள்ளையடித்த கமரா கொழும்பில் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

பத்திரிகை படப்பிடிப்பாளரிடமிருந்து நல்லூரில் கொள்ளையடிக்கப்பட்ட கமரா கொழும்பு புறக்கோட்டை நடைபாதையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தபோது கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே நடந்த மற்றொரு கொள்ளைச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட தகவலைத் தொடர்ந்தே இக்கமரா கைப்பற்றப்பட்டது.

சுமார் ஒருமாதத்திற்குமுன்னர் பத்திரிகைப் படப்பிடிப்பாளரான திரு. எஸ். கதிரவேலு நல்லூர் கந்தசுவாமி கோவிலடியால் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது ஆயுதம் தாங்கிய இரு இளைஞர்கள் அவரது கமராவைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

யாழ் ரயில் நிலையத்தில் வைத்து அண்மையில் கார் ஒன்றைக் கடத்திச் சரவணைச் சேர்ந்த உள்ள சுப்பிரமணியம் என்பவரது வீட்டில் கொள்ளையடித்தது சம்பந்தமாக கைதான நபர்களை விசாரணை செய்தபோது அவர்களில் ஒருவரிடமிருந்து இக்கமராக் கொள்ளை பற்றிய தகவல் தெரியவந்தது.

சரவணைக் கொள்ளை சந்தேக நபரும் தற்போது றிமாண்டில் இருப்பவருமான அருள்தாஸ் அல்லது குணம் என்பவரும் அரியாலையைச் சேர்ந்த இராசரத்தினம் சிறிஸ்கந்தராஜாவும் கமராவைப் பறித்தார்கள் என்றும் சிறீஸ்கந்தராசா அதனை கொழும்பில் விற்றார் என்றும் விசாரணையின் போது தெரிய வந்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மக்கள் உணவு உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றனர்

### யாழ். நகரில் பொலநறுவ மாவட்ட அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

உணவு உற்பத்தியில் இலங்கையின் ஏனைய பகுதி மக்களிலும் பார்க்க யாழ்ப்பாணத்து மக்கள் முன்னணி வகிக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மதுறு ஓயாவிற்கு சிரமதானத்தை மேற்கொள்ளுவதற்காகச் செல்லும் 500 இளைஞர்கள் மத்தியில் பேசிய பொலநறுவ மாவட்ட அமைச்சரும், மின்னேரியா எம். பியுமான திரு மெரில் டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து மதுறு ஓயா திட்டத்தில் சிரமதானத்தை மேற்கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இளைஞர்கள் 500 பேர் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் இருந்து 12 பஸ்களில் மதுறு ஓயாவுக்குப் புறப்பட்டனர் அக்குழுவினருடன் பொலநறுவ மாவட்ட அமைச்சர் திரு மெரில் டி சில்வா, [illegible] திச்சபை அதிகாரிகளான திருவாளர்கள் ரி. ஜே. டி சொய்சா, ஸ்ரான்லி தென்னக்கோன். வனகாவலர், வெஸ்லி ருபசிங்கா, ஐக்கிய தேசியக் கட்சியின் வடபிரதேச அமைப்பாளர் திரு. கே கணேசலிங்கம், யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு. ஏ. ஜீ. இராஜசூரியர் மற்றும் ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர்கள் பலரும் சென்றனர்.

திரு மெரில் டி சில்வா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் கடின உழைப்பாளர்கள் அதனால்தான் இப்பகுதி மக்கள் உணவு உற்பத்தியில் முன்னிற்கிறார்கள்.

ஜனதிபதி ஜே. ஆர். இந்த நாட்டின் அபிவிருத்தியில் கூடுதலான அக்கறை காட்டி வருகிறார். தார்மீக சமுதாயத்தில் உணவுக்குப் பஞ்சம் ஏற்படுவதை அவர் விரும்பவில்லை. மகாவலி மூலம்

(-5ம் பக்கம் பார்க்க)

வல்வை கோஷ்டி மோதல்

## சமாதானமாகத் தீர்க்க நடவடிக்கை

(நெல்லியடி)

வல்வெட்டித்துறைபொலிஸ் பகுதிக்குள் இரு கிராமத்தவர்களிடையே ஏற்பட்ட கோஷ்டி மோதலை அடுத்து எழுந்துள்ள நிலையை சமாதான ரீதியில் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நேற்று பிற்பகல் கூட்டப்பட்ட சமரச மகாநாட்டில் இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இம்மகாநாட்டினை உடுப்பிட்டி எம் பி. திரு. த. இராசலிங்கம், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மூ தம்பிமுத்து ஆகியோர் கூட்டினர்.

இம்மகாநாட்டில், சம்பந்தப்பட்ட இரு கிராமங்களைச் சேர்ந்தவர்களும், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கணேகமுவவும் கலந்து கொண்டனர்.

### ஏழுபேர் கைது

இது இவ்வாறிருக்க, மேற்படி பகுதிகளில் பொலிசாரின் ரோந்து நடவடிக்கைகள்பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், இப்பகுதிகளில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் சம்பந்தமாக இதுவரை ஏழு பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இக்கோஷ்டி மோதலின் போது மிகவும் மோசமானமுறையில் சேதப்படுத்தப்பட்டுள்ள சைக்கிள் ஒன்றும் பொலிஸ் பாதுகாப்பிலுள்ளது.

மேற்படி கோஷ்டிமோதலின் போது தாக்குதலுக்குள்ளான நால்வர் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுனர்.

## தமிழாராய்ச்சி நினைவுச் சின்னத்திற்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது உயிர் நீத்தவர்களின் ஞாபகச்சின்னத்திற்கு பொலநறுவ மாவட்ட அமைச்சர் திரு, மெரில் டி. சில்வாவும் மற்றும் மகாவலித் திட்ட அதிகாரிகளும் ஐ. தே. க. பிரமுகர்களும் பொற்றி மாலைசூட்டி அஞ்சலி செலுத்தினர். பின் கோட்டை முனியப்பர் ஆலயத்திற்கும், நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் சென்ற பின்பே 500 இளைஞர்களும் தலைவர்களும் 12 பஸ்களில் மதுறு ஓயா சென்றனர்.

இக்கோஷ்டியினருக்குப் பாதுகாப்பாக பொலிசாரும் அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் செல்கின்றது (கொ-கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HONDA CB 350 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு புதிய பற்றரியும் இரு கண்ணாடிகளும் உண்டு தொடர்பு கொள்ளவும். சாந்தி ரயர் வேக்ஸ், 218/2 முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8085 5494

நல்லின இளம்பசுமாடுகள் விற்பனைக்குண்டு. செ. குமாரசுவாமி, 'பொம்பே கவுஸ்' இணுவில். (காலிங்டன் தியேட்டர் அருகில்) 5502

திருத்தி அமைக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட A 40 டெவன் சோமசெற், 1000 மொறிஸ் மைனர் ஸ்ராட்டர் மோட்டேஸ் மைனர் கிறுங் ஷாப்ற்- பெயறிங்குகளுடன் A 30, மொறிஸ் மைனர் கியர் பொக்ஸ். குறைந்தவிலையில் உண்டு. செல்வலக்ஷ்மிஸ், 162, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5512

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட தச்சு வேலைகள் செய்யக்கூடிய மேசைப்பட்டடை (மோட்டார் சிங்கிள்பேஸ்) நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடவும், விபரங்களுக்கும் எஸ். நாதன், 33, பாரதி லேன், கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். 5509

இரண்டு முற்றிய வேப்ப மரங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. திலகரத்தினம், டச்சு றோட், அளவெட்டி. 5488

சன்யோ ரூ இன் வண் 4 ஸ்பீக்கர்-2 எக்ஸ்ரா மைக். இடம்- திருவுளம், அச்சுக்கூட ஒழுங்கை. கொக்குவில். 5511

## தேவை

அலுமினிய தொழிற்சாலைக்கு வேலை தெரிந்த ஸ்பின்னர்கள், பொலிசர்கள், லேத்மன்கள் (Lathemen) வேலை பழகுபவர்கள் உடனடியாகத் தேவை விபரங்களுக்கு நேரில் வரவும். செசிசன்ஸ் மெட்டல் இன்டஸ்ரீஸ், 118, கே. கே. எஸ் .வீதி, யாழ்ப்பாணம். 5503


# வெள்ளி விழாச் சிறப்பிதழ்

(அரியாலை)

இலங்கைத் தேசிய குருத்துவக் கல்லூரி ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு வெள்ளி விழாச் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டுள்ளது.

பன்மொழிப்புலவர் சுவாமி ஞானப்பிரகாசரின் படத்தைக் முதற் பக்கத்தில் கொண்டுள்ள இம் மலரில் கழக ஸ்தாபகர் அருட் திரு.ஜி.ஏ.குருசாமி அடிகள் கொழும்பு பேராயர் அதிவந்.நீக்கலாப் மாக்கஸ் பர்ணாந்து ஆண்டகை யாழ். ஆயர் அதிவந் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை, இலங்கைத் தேசிய குருமட அதிபர் அருட்திரு ஹரால்ட் பண்டிதரத்ன, தமித்தூதுவர் அருட் திரு.சே தனிநாயகம் அடிகளார் கழகக் காப்பாளர் அருட் திரு: இம்மானுவல் பர்ணாந்து அடிகள் ஆகியோரின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இக் கழகத்தின் தலைவராக செல்வன் எஸ்.ஞானஆனந்தனும், செயலாளராக செல்வன் சி.யே.ஜெயக்குமாரும் உள்ளனர். (அ)


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



உ
சிவமயம்

# பூப்பு மங்கள நீராட்டு விழா

நாள்: ரௌத்திரி ஆண்டு சித்திரைத் திங்கள் 7-ம் நாள் (19-4-1980) சனிக்கிழமை.
காலம்: முற்பகல் 10-50 மணிமுதல் 11-36 மணி வரை மிதுனலக்கின நல்லோரை

எமது தலைமகள்

## திருவளர் செல்வி கல்யாணிக்கு

பூப்புமங்கள நீராட்டத் திருவருள் துணைகொண்டு நிச்சயித்திருப்பதால உறவினர், நண்பர்கள் அனைவரையும் சுற்றஞ்சூழ வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்
இ. செல்லையாவும் (செல்லப்பா)
(உரிமையாளர்: கல்யாணி மோட்டார் சேவை)
நயினாதீவு-5. (5510) துணைவியும்.



# கோட்டு விற்பனவு விளம்பரம்

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல:- MB/2474

கந்தையா விஜயானந்தன் - கந்தரோடை, சுன்னாகம் வழக்காளி

எதிராக

1. கந்தையா கைம்பெண் பொன்னம்மாவும்
2. தம்பிப்பிள்ளை சபாரத்தினமும், மடத்தடி மாவிட்டபுரம் எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் MB/2474ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 9ம் திகதி வெள்ளிக்கிழமை காலை (9-05-1980) 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலவிற்பனையை நடத்த நியமித்துள்ளேன்.

### தீர்வைத் தொகை

மேல்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 889/85வும் மேலும் 500/-ற்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 வட்டி வீதம் வழக்கு அனைத்த திகதியாகிய 1978-ம் ஆண்டு ஆனிமாதம் 29-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1979-ம் ஆண்டு பங்குனி மாதம் 16-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 452-05 கொடுக்கவேண்டியிருப்பதாலும் செலவுத் தொகையில் பகுதிப் பணமாக கொடுத்த ரூபா 100/- கழிபடல் வேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம், வடக்குப்பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை "மூடத்தாசிமாவும் கடுத்தாவத்தையும்" நிலப்பரப்பு ஆறரையேபரைக்காலும், வீடுகளும் செய்பயிர் வான்பயிர்களும் மேற்கெல்லைக் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை: கிழக்கும், வடக்கும், தெற்கும் ஒழுங்கை. மேற்கு சிதம்பரி கந்தையாவின் ஆதனம். இதில் குறித்த வீடுகளில் மேற்குப்புறமாக இருக்கும் கல்வீடுகளில் மேற்குப் புறமாகவிருக்கும் கல்வீடு நிந்தமாகவும் மற்றைய வீடுகள் பிறநிங்கலாகவும் மிகுதியடங்கலிற் சொரியலாய் ½ பங்கும் அதற்குரியவைகளும்.

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும், மதிப்பாளரும்.
அராலி வடக்கு.
வட்டுக்கோட்டை.
16-4-1980. 5513



# கோட்டு விற்பனவு விளம்பரம்

## யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல ஈடு: 501

[1] வேலுப்பிள்ளை கதிரவேலு,
82/2, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். — வழக்காளி.

எதிராக

[1] இரத்தினப்பிரகாசம் சோமாஸ்கந்தபிள்ளை,
ஆராட்சியார் வளவு, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் ஈடு வழ. இல: 501-ல் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 6-ந் திகதி (6-5-1980) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 15,126-ம் 60 சதமும், 14-6-77 தொடக்கம் 4-11-77 வரைக்கும் ரூபா 12,500/-க்கு நூற்றுக்கு வருடம் 24 வீதவட்டியும், பின்திகதி தொடக்கம் முழுத் தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு வருடம் 5 வீ வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 634ம் சதம் 20ம்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கிறை "குதிதாங்கிப்புலம்" நில. பர: 4 குளி 14½ வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும், இந்தப் பரப்பு நாலு குளி பதினாலரைக்கும் எல்லை கிழக்கு: சரவணமுத்து சுப்பையாவின் உரிமைக்காரரின் ஆதனம். வடக்கு: செல்லப்பா பெண் செல்லதிலகதனம் மேற்கு: இராசரத்தினம் கைம்பெண் தையல்நாயகியினுதனம். தெற்கு: ஒழுங்கை இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

அ. சிவானந்தன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

"நித்திய கல்யாணி"
வாவி ஜேட், திருநெல்வேலி வடக்கு
யாழ்ப்பாணம். 16-4-1980. 5508


தமிழ் டாக்டருக்கு அமெரிக்காவில் வசதிகள்:

# நமது நாட்டிலும் ஏற்படுத்திக் கொடுத்தால் என்ன?

## நல்லூர் சிவா கேட்கிறார்

(நெல்லியடி)

"அமெரிக்க நாட்டில் நமது தமிழ் வைத்திய அதிகாரிகள் சிறப்பாகப் போற்றப்பட்டும், வரவேற்கப்பட்டும் வருகிறார்கள். இதன் காரணமாகவே நமது வைத்திய அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றார்கள். இங்கும் அவர்களுக்கு அரசாங்கம் வசதிகளைச் செய்துகொடுத்தால் என்ன?"

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி.யுமான திரு. மு. சிவசிதம்பரம், மந்திகை அரசினர் வைத்திய சாலையில் பணிபுரிந்து, திருகோணமலை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியாக இடமாற்றம்பெற்றுச் செல்லும் டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை பிரிவுபசார விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேராசிரியர் திரு. இ. முத்துத்தம்பி தலைமையில் கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பிரிவுபசார வைபவத்தில் திரு சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"அரசாங்கம் வசதிகளைச் செய்துகொடுக்கவில்லை என்ற காரணத்தினால் பல வைத்திய அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறியபோதும் சொந்த மக்களுக்குச் சேவை செய்வதே பெரிதென எண்ணிச் செயற்படும் கதிரவேற்பிள்ளை போன்ற வைத்திய அதிகாரிகளை நாம் போற்றிப் பாராட்டவேண்டும், வைத்திய அதிகாரிகள் துணிவுடன் செயலாற்றினால்தான் மக்கள் அதனால் பயன்பெறமுடியும்.

"கிளிநொச்சியில் டாக்டர் என்.எம்.பெரேராவுக்கு கறுப்புக்கொடி காட்டிக் காயமடைந்த வாலிபர் ஒருவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபோது பொலிசார் தடுத்து நிறுத்தினர்கள் ஆனால் கதிரவேற்பிள்ளை துணிச்சலுடன் அவ்வாலிபருக்குச் சிகிச்சையளித்து அவரைக் காயத்திலிருந்து தப்ப வைத்தார். துணிவில்லாது விட்டால், அந்த இளைஞனை வேறு யாருமோ பயன்பெற முடியாமற்போய்விடும்.

"இவரது இடமாற்றத்தைத் தடுத்துநிறுத்தலாம். ஆனால் இவரது சேவையைத் திருகோணமலை மக்கள் பெற முடியாமற்போய்விடும். அங்குள்ள மக்களும் இவரது சேவையைப் பெறுவதன் மூலமே நமது வடபகுதி மக்களின் சேவை மனப்பான்மையைக் கிழக்கு மாகாண மக்கள் அறிந்துகொள்ளமுடியும்" என்றும் தெரிவித்தார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. க. இராசலிங்கம் தமதுரையில், "வைத்திய அதிகாரிகள் தாம் ஏற்றும் ஊசி மருந்துகள் மூலம் நோய்களைக் குணப்படுத்தலாம் என்று மட்டும் எண்ணிவிடக்கூடாது. நோயாளிகளுடன் மனம்விட்டுப் பேசி அவர்களின் உள்ளங்கள் பூரணமும் வருடுவதன் மூலமே நோய்களை விரைவில் மாற்றிவிடலாம்" என்று கூறினார்.

மற்றும் பலரும் பிரிவுபசார உரைநிகழ்த்தினார்கள் கல்பொல்லைச் சந்தியிலிருந்து டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை ஊர்வலமாகப் பிரிவுபசார வைபவம் நடைபெற்ற மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார். (ரு)

# புத்தாண்டு விற்பனை ரூ 11,75.000 வருமானம்

(உடுப்பிட்டி)

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புத்தாண்டை முன்னிட்டு மேற் கொண்ட விசேட விற்பனையின் மூலம் 11,75,000 ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளதாக சங்கக் கணக்காளர் திரு. எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார்.

இவ் விசேஷ விற்பனவில் போது புடவை விற்பனவு மூலம் 6லட்சம் ரூபாவும் கிளைகளின் மூலம் 5,50,000 ரூபாவும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் முன்பாக விசேடமாக நிறுவப்பட்ட தற்காலிக விற்பனவு நிலையத்தின் மூலம் மொங்கல் பொருள்காளசட்டி, பானை, வாழைப்பழம், தேங்காய் போன்ற பொருட்கள் 25,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (அ)

# சங்கானை ப. ச. மூன்று கடைகள் அமைக்கிறது

[சங்கானை]

நவீன வசதிகள் கொண்ட மூன்று கடைகள் சங்கானைப் பட்டினசபையால் சங்கானை பஸ்நிலையத்திற்கு மேற்குப்புறமாக அமைக்கப்படவுள்ளன.

சுமார் 60 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக்கடைகளுக்கான அடிக்கல் நாட்டுவிழா அடுத்தமாத முற்பகுதியில் இடம்பெறவுள்ளது. இக்கட்டிடத்திற்கான செலவை

(8-ம் பக்கம் பார்க்க)


# சைக்கிள் பாவிப்பாளர்களுக்கு ஓர் நற்செய்தி

ராஜா ஹமில்டன் (Raja Hamilton) 22"
சைக்கிள்கள் B/90 சீற்றுடன் ரூபா 895-00
றோயல் ஹமில்டன் (Royal Hamilton) 21" லேடீஸ் சைக்கிள்கள் பெல், ஸ்ராண்ட்,
முழுச்செயின் கவருடன் ரூபா 1, 100-00

மேற்கூறிய சைக்கிள்கள் உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

'ஓரியன்ஸ்' (Orions) - யப்பானில் முழுமையாக தயாரிக்கப்பட்டது. (12 வோல்ட் சன்யோ டைனமோ செற், B/90 சீற், ஒரிஜினல் கோபா கரியர், பெல், ஸ்ராண்ட், வெள்ளிக்கம்பி, பம்ப் முதலியவற்றுடன்) ரூபா 1650-00

ஆனி 80 நடுப்பகுதியில் விற்பனைக்குவரும்.
ஓடர்கள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு வழங்கப்படும்
ஏக இறக்குமதியாளர்கள்:

## சிலோன் மேச்சன்ஸ் லிமிட்டெட்,

484, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் (5499)
தொலைபேசி: 234


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அறநடத்தை விதிகளிற் சிறந்தது தன்னடக்கமே. தன்னடக்கம் சிறந்த பேரின்பத்துக்குச் செலுத்துகிறது. தன்னடக்கமே, உண்மை நாடுவோனின் அல்லது தேடுவோனின் நித்திய கடமை.

—சுவாமி சிவானந்தர்

## இலங்கையின் இன்றைய பிரச்னை: இருநாடுகள் ஒன்றாக இயங்க முடியுமா என்பதுதான்!

### பிரிட்டிஷ் எம். பி.க்களுக்கு 'வி-என்' விளக்கம்

(லண்டன்)

"இரண்டு நாடுகள் ஒன்றாக இயங்க முடியுமா என்பது தான் இலங்கையிலுள்ள இன்றைய அதி முக்கிய பிரச்சினை!" என்று சாவகச்சேரி எம். பி.யும் சர்வதேச பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வி. என். நவரத்தினம் இங்கு கருத்து வெளியிட்டார்.

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செல்லும் வழியில் லண்டனில் தரித்து நின்றபோது பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய போதே திரு. நவரத்தினம் மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்.

இக் கலந்துரையாடலின் போது திரு நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில், இலங்கைத் தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகிறது. சிறுபான்மையினரின் உரிமைகள் மறுக்கப்படுவது மட்டுமன்றி மொழி உரிமை அடிப்படை மனித உரிமைகளோ பெருமளவில் மறுக்கப்படுகின்றன" என்றார்.

இலங்கையின் இன்றைய நிலைமையை உலக வல்லரசுகள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளாது பார்த்துக் கொள்ளுமாறு பிரிட்டிஷ் அங்கத்தவர்களிடம் கருத்து வெளியிட்ட திரு. நவரட்னம் இலங்கையில் தனித்தனியாக சுதந்திரமாக விளங்கிய மூன்று இராச்சியங்களை ஒன்றாக்கிய பிரித்தானியரே, தாங்கள் செய்தவற்றை அகற்ற வேண்டும். என்று கேட்டுக்கொண்டார்.

சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் பிரிட்டிஷ் குழுத் தலைவரும், எம். பி.யுமான திரு. ஜோன் பெக் சாவகச்சேரி எம். பி.க்கு இராப்போசன விருந்தளித்துக் கௌரவித்தார். (கொ-நி)

## மக்கள் கருத்து

### நாவாந்துறை நூல்நிலையத்தின் சீர்கேடு

யாழ். மாநகராட்சி மன்றத்தின் கீழ் நாவாந்துறையில் இயங்கி வரும் நூல் நிலையத்தின் நிலையைப் பற்றிப் பல்வேறு புகார்கள் அனுப்பப்பட்டிருந்தும் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. நாவாந்துறை வட்டாரத்தில் வாழும் பல்வேறு சமூகத்தினருக்கும் பொதுவாக இந்நூல்நிலையம் விளங்குகின்றது. ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிக்க விரும்பும் மக்களுக்கு இது பயன்படுவதாகத் தெரியவில்லை. பின்வரும் குறைபாடுகளை முதல்வர் தமது கவனத்தில் எடுத்து ஆவன செய்வார் என்று நம்புகிறேன்.

1. வாரத்தின் ஏழு நாட்களும் திறந்திருக்கவேண்டிய இந்நூல்நிலையம் கிழமையில் நான்கு நாட்களுக்குக் குறையாமல் பூட்டப்பட்டிருக்கும். காரணம் கேட்டால் ஊழியர் பற்றாக்குறையாம்.

2. பிற்பகல் 1 மணியிலிருந்து இரவு 8 மணி வரை திறந்திருக்கவேண்டிய இந்நிலையம் பிற்பகல் 2-30 மணிக்குப் பிறகே திறக்கப்படுகின்றது. அதே வேளையில் 6-30 மணிக்கிடையில் பூட்டப்பட்டும் விடுகின்றது.

3. மின்னிணைப்புப் பொருத்தப்பட்டிருந்தும் மின் விளக்குகள் எரியாது எங்கோ பழுது என்று அடிக்கடி காரணம் கூறி நேரத்துடன் நூல்நிலையம் பூட்டப்படுகின்றது.

4. எந்நேரமும் நூல்நிலையத்தில் இருக்கவேண்டிய ஊழியரை அங்கே காண்பது அரிது.

5. பழைய பத்திரிகைகளை வாசகர்கள் வாசிப்பதற்குக் கேட்டால் கிடைப்பதில்லை பல்வேறு சாக்குப்போக்குகள் சொல்லி கொடுக்கப்படுவதும் இல்லை.

6. பத்திரிகைகள் தேவையானபோது தட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றது.

7. நூல்நிலையம் கூட்டித் துப்பரவு செய்யாமையால் அழுக்கடைந்து தூசி படிந்து உள்ளேயிருந்து வாசிக்கமுடியாத நிலையிலுள்ளது.

8. இருக்கைகள் போடப்பட்டிருந்தும் சிலர் பத்திரிகைகளை கொண்டுசென்று வீதியிலும், படியோரங்களிலும் வைத்தும் படிக்கின்றனர். இதை கடமையாற்றும் ஊழியர் கவனிப்பதில்லை.

மேற்கூறிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து இந்நூல் நிலையத்தால் பொதுமக்கள் யாவரும் பயன்பெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை இனிமேலாவது உயர் அதிகாரிகளும், முதல்வரும் செய்து தருவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

எஸ். ஜெயம்,
நாவாந்துறை

## பெண்ணுரிமைச் சமூகத்தின் கற்புத்திறனையும் வீரத்தையும் விளக்கும் ஒப்பாரி பாடல்கள்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் "வன்னிவள நாட்டுப் பாடல்கள்" (தொகுப்பு நூல்) வெளியீட்டு விழாவினையொட்டி, இச்சிறப்புக் கட்டுரை இங்கு வெளிவருகிறது.

ஆ. சிவநேசச்செல்வன் எம். ஏ.
(யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

கிராமப்புற வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்ட நாட்டுப் பாடல்களின் மூலம் சமூக அமைப்பின் தன்மைகளையும் அதன் பின்னணியிலே தனி மனித உணர்வில் ஏற்படும் சிந்தனைகளையும் உணரும் வாய்ப்பு உண்டு. கேட்பவர்களின் உள்ளத்திலே ஆழ்ந்த சோகத்தை எழுப்பும் திறம் வாய்ந்தவை ஒப்பாரிப் பாடல்கள். இறப்பின் அல் ஏற்பட்ட அவலங்களை உணர்ச்சித் துடிப்புடன் கூறும் தன்மையில் அமையும் இப்பாடல்கள் பெண்களின் இதயத் துடிப்பாகத் தோன்றுபவை. தாலாட்டைப் போலவே ஒப்பாரியும் பெண்களுக்கே [பெரும்பாலும்] உரியவை. தாலாட்டு இலக்கிய மரபினூடே காலப்போக்கில் பிரபந்த வடிவத்தைப் பெற்றது. ஒப்பாரிப் பாடல்களும் புலம்பல்களாக இலக்கிய மரபினூடே வளர்ந்துவந்தமை குறிப்பிடத்தக்கது. இலக்கியங்களில் அமையும் துன்பப் பாடல்களினூடே ஒப்பாரிப் பாடல்களின் தன்மை கலந்து விடுகிறது.

பிறர் நலனுக்காகத் தனது சொந்த நலன்களையும், உயிரையும் தியாகஞ்செய்தவர்களை நினைவுகூரும் வகையிலான உணர்வுகளை இவ்வொப்பாரிப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

வன்னிப் பிரதேசத்திலுள்ள தெய்வ நம்பிக்கைகளையும், கிராம தேவதை வணக்கங்களையும், கற்பின் திறத்தினால் யானையை அடக்கிச் சாதனை புரியும் அரியாத்தையும் அவளை வஞ்சகமாகக் கொன்ற பணிக்கர் குழுவின் வஞ்சகத்தினையும், இறுதியில் வேலப்பணிக்கனும் உடன்கட்டை ஏறி மடியும் அவலத்தினையும் கதை பொதி பாடலாகத் தருகின்றது. 'வேலப்பணிக்கர் பெண் சாதி அரியாத்தை பேரில் ஒப்பாரி' என்ற நூல் கிளைக் கரவையம்பதியைச் சார்ந்த வ. கணபதிப்பிள்ளை என்பவரால் பழைய ஏட்டுப் பிரதியிலிருந்து (1934) பவ வருடம் வைகாசி மாதம் அச்சிடப்பட்ட இந்த ஒப்பாரி இன்றும் ஏட்டுப்பிரதி ரூபத்திலே வன்னிப் பிரதேசத்திலே வழங்கிவருகிறது. பாடபேதங்களும் பிரதிபேதங்களும் நிரம்பிய இப்பாடல் வன்னிப் பிரதேசத்துப் பணிக்கர் குழுவினரின் பழமையான நம்பிக்கைகளை நினைவூட்டுவதாக உள்ளது இப்பொழுது செ. மெற்றாஸ்மயில் அவர்களால் தொகுக்கப்படும் 'வன்னிவள நாட்டுப் பாடல்கள்' என்ற நூலில் இவ்வொப்பாரி பாடபேதங்களுடன் வெளிவருவது குறிப்பிடத்தக்கது வனதேவதைகளை அடக்குவதிலும், அவற்றை ஏவுவதிலும் வல்லமை நிறைந்த வன்னிநாட்டு வழக்கங்களையும், பணிக்கர் குழுவின் நம்பிக்கைகளையும், செய்திகளையும் இவ்வொப்பாரிப் பாடல் நினைவுபடுத்துகின்றது. சுருங்கக் கூறின், மனித சக்தியிலும் பார்க்கத் தெய்வீக சக்தியால் விலங்குகளை அடக்கியாளும் பணிக்கர் குழுவின் சமூக நம்பிக்கை வெளிப்பாடாகவும் இவ்வொப்பாரிப் பாடல் அமைகிறது.

அக்காலத்தில் நடந்த ஒரு சம்பவத்துக்குப் புலவர் ஒருவர் கொடுத்த பாடல் வடிவமே இவ்வொப்பாரியின் வெளிப்பாடு.

சமூகக் கதைப் பாடல் வகையுள் இந்த ஒப்பாரிப் பாடலை அடக்கலாம். அடங்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்பேசும் மக்களின் பொன்னான நாள்

இன்று 19-4-80 சனிக்கிழமை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பொன்னான நாள். நம்மிடையே பொன்னாக மதிக்கப்பட்ட பெருமகன் அமரர் ஜி. ஜி. அவர்களின் ஆத்மா சாந்தியுறும் நாள். அப்பெருமகன் நமக்காக, நமது நல்வாழ்விற்காக திட்டமிட்டு தனது உடல் பொருள், ஆவி அத்தனையையும் இட்டு ஆரம்பித்துத் "தமிழ்க் காங்கிரஸ்" புத்துயிர் பெறும் புனித நாளாகும்.

தமிழன் சரித்திரத்தில் ஏற்பட்ட எத்தனையோ இன்னல்களை எல்லாம் தனது ஆற்றலாலும், அறிவின் வேகத்தாலும் வென்றெடுத்த காவிய நாயகனான அமரர் ஜி ஜி. ஆரம்பித்த கட்சி எங்கே அழிந்தொழிந்து விடுமோ என்று ஏங்கி அங்கலாய்த்தனர் அபிமானிகளும், ஆதரவாளர்களும். ஆனால் தமிழினம் தாழ்வுற்று, நலிவுற்று இருந்தபோது அவர்களை எல்லாம் ஒருகொடியின் கீழ் ஒன்றிணைத்து அரசியல் உணர்ச்சியை ஊட்டிய அன்னாரின் கட்சி, அண்ணல் அமரன் ஆரம்பித்த கட்சி, இன்று புதுப்பொலிவு பெறுகின்றது.

மீண்டும் நால்வர்ணக்கொடி கம்பீரமாகப் பட்டொளிவீச ஆரம்பித்துவிட்டது. தனக்கென ஒரு பணிமனை, ஒரு பத்திரிகை, திட்டமான கொள்கை இவைகளைக்கொண்டு மக்கள் முன் வீறுநடைபோடத்தொடங்க முன்வந்துள்ளது.

அமரர் ஜி. ஜி. விட்டுச்சென்ற பணிகளைத் தொடரவேண்டும். அதற்காக இன்று முழுமனதுடனும், அபிமானத்துடனும் முன்வந்துள்ள பெரியோர்கள், இளவல்கள், தாய்மார்கள் எல்லோரையும் மனமாரப் பாராட்டுகின்றோம் ஒவ்வொரு தமிழ்பேசும் மகனுக்கும் இத்தநாடு சொந்தம். பருத்தித்துறை முதல் தேவேந்திரமுனைவரைக்கும், மட்டக்களப்பு முதல் சிலாபம் வரைக்கும் உள்ள ஒவ்வொரு அங்குல நிலத்திலும், பரந்து, விரிந்து வாழ நமக்கு உரிமையுண்டு என்று உரிமைக்குரல் எழுப்பிய சிம்மக்குரலோனின் உறுதியான கோட்பாட்டை நாம் மீண்டும் நிலைநிறுத்தமுனைய வேண்டும் அல்லது சுதந்திர புருடர்களாக நாம் நம் தலைவிதியை நிர்ணயிக்க எம்மால் ஆன அத்தனை வழிகளையும் கடைப்பிடித்து மீள வழிதேட வேண்டும்.

நிறைவானதும், அத்தியாவசியமானதுமான பணிகளில் நாம் ஈடுபடவேண்டும், நல்ல திட்டங்களையும் அதற்குரிய பாதைகளையும் வகுத்து மக்கள் முன்வைத்து, மீண்டும் நாம் இழந்த ஆதரவைப்பெற ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். இதுவே எமது கட்சியின் வளர்ச்சிக்கும் மறைந்த தலைவரின் ஆத்ம திருப்திக்கும் ஏற்றவழியாகும். அவரின் ஆத்மா மானசீகமாக எமக்கு முன்னின்று வழிநடத்துமென்ற நம்பிக்கையுடன் முன்னேறுவோமாக.

பொ. சபாரத்தினம்
... செல்வம்
... உறுப்பினர்.

## நாடும் நடப்பும்

இரண்டுநாட்களாக யாழ்ப்பாணத்தில் திடீர் திடீரென்று நல்லமழை கொட்டுகிறது. ஏற்கனவே உக்கிப்போன கிடுகு வேலிகளும் கூரைகளும் மழையைக்கண்டு உதிர்ந்துகொட்டத்தொடங்கிவிட்டன. யாழ்ப்பாணத்தில் இப்போது மண்ணுக்கும் பொன்னுக்கும் விலை அதிகமானாலும் மூலைமுடுக்குகளிலெல்லாம் கட்டிடங்கள் எழுந்துள்ளபோதிலும் கிடுகு வேலிகளும் ஓலைக்கூரைகளும் இன்னமும் இருக்கின்றன. சிமெந்தின் விலைதான் அதிகரிக்கவில்லை கிடுகின்விலையும் கிடுகொன்று எதி நூறு கிடுகு அறுபது ரூபாயாகவிற்கிறது. கிடுகு வேலியும் ஓலைக்கூரையும் இல்லாவிட்டால் கறையான்கள் எங்கேபோவது, கறையான் புற்றெடுக்காவிட்டால் பாம்புகள் குடியிருப்பது எங்கே?

நேற்றுக்காலை வீட்டிலிருந்து வேலைக்குப்புறப்பட்டு வாசலைத் தாண்டிக் கால்வைத்ததும் கணுக்கால் அளவுக்கு வாசலில் வெள்ளம் ஐந்து நிமிஷம் மழைபெய்தால்போதும் யாழ். நகரில் பல ஒழுங்கைகளிலும் சில வீதிகளிலும் சில நாட்களுக்கு வெள்ளம் நிலைத்துநின்றுவிடும் மாநகரசபைத் தேர்தல் சமயத்தில் வாக்குத்தேடி வரும் வேட்பாளர்களிடம் எங்கள் ஒழுங்கையின் குடியிருப்பவர்கள் முறையிடுவது மாமூலான விஷயம். சென்ற தேர்தல் சமயத்திலும் இப்படியே செய்தார்கள். முன்னராவது வட்டாரத்துக்கு ஒருஉறுப்பினர் என்றிருந்தது தேர்தல் சமயத்திலும் இப்படித்தான் வாக்குச் சேகரித்தார்கள். தேர்தல்முடிந்தபின் மெம்பரை இன்னும் எங்கள்பக்கம் காணவில்லை.

ஃ ஃ ஃ

களவு, கொள்ளை வழிப்பறி போன்ற குற்றச்செயல்கள் நமதுநாட்டில் அதிகரித்துவருகிறதென்பதற்கு அன்றாடப் பத்திரிகைகளில்வரும் செய்திகள் போதிய சான்று என்னதான் முயற்சிசெய்தாலும் பொலிசும் பொதுமக்களும் நல்லுறவைவளர்த்து இக்குற்றச்செயல்களை ஒழிப்பதற்கு முயன்றாலும் இவற்றை ஒழித்துக்கட்டுவது சுலபமாகத் தோன்றவில்லை

இதுபற்றி சிலர் பேசிக்கொண்டிருந்தார்கள். 'அரபு நாடுகளில் இப்படியான குற்றச்செயல்கள் இல்லை' என்றார் ஒரன்பர். அங்கெல்லாம் இவற்றுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுவதே இதற்குக் காரணமென்று அவரே சொன்னார்.

இங்கும் குற்றச்செயல்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டால் இவற்றை ஒழித்துவிடலாம் என்பது அந்த அன்பரின் கருத்து.

கஷ்டப்பட்டுபடித்துசிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைந்த மருந்துக் கலவையாளர்ஒருவருக்கு இதுவரை நிறுத்தி வைக்கப்பட்ட வருடாந்த சம்பள உயர்வு, பதவி திரந்தரம், பதவி ஊர்ஜிதம் என்பன மூன்று ஆண்டுகளாகியும் வழங்கப்படவில்லையாம். இதுகுறித்து கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள பணிப்பாளருக்கு 11 நினைவுறுத்தல் கடிதங்களை யாழ் மாவட்ட சுகாதகர சேவை அத்தியட்சகர் அலுவலகத்தினர் எழுதியும் இதுவரை அவருக்கு நிவாரணம் கிடைக்கவில்லையாம். கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் மருந்துக் கலவையாளர் ஒருவருக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளதாம். இவரின் பரிதாப நிலையை அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்க யாழ். கிளைச் செயலாளர், யாழ். சுகாதாரசேவை அத்தியட்சகருக்கு சுட்டிக்காட்டியதை ... து 12-வது நினைவுறுத்தலையும் அத்தியட்சகர் ... புப்பு சுகாதாரசேவைப்

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணுரிமைச் சமூகத்தின்.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
காத கொம்பன் யானையைத் தனது கற்பின் சக்தியால் பணியவைக்கும் அரியாத்தை வன்னிப் பிரதேசப் பெண்களின் திறம்நிறைந்த வாழ்க்கையையும், ஒழுக்க நெறியையும் மரபுகளையும் புலப்படுத்தபவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். வீரம், கற்பு, குலக்குழுவின் மானம் ஆகியன இப்பாடலின் பிரதான அம்சங்கள். குலக்குழுவின் மானம் காப்பதற்காகக் கற்பினை முன்வைத்துச் சென்ற வீரப் பெண்மணியான அரியாத்தையின் சாதனையும், அவள் முடிவும், மரபுவழிச் சமுதாயத்தின் சடங்குகளும் இயக்கமும் இப்பாடலின் பின்னணியிலே நாம் அவதானிக்க வேண்டியவை. யானை பிடிப்பதனால் ஏற்படும் சமூக அந்தஸ்தும், தொழில்முறை ரீதியாக மற்றையோர் பெருமை பெறும் நிலையிலே ஒருவரை ஒருவர் வீழ்த்தும் பொறாமை நிறைந்த சூழலும் குறிப்பிடத்தக்கவை. முற்றிலும் அடிமைப்படாத பெண்களின் சமூக அந்தஸ்து வன்னிப்பிரதேசத்தில் உயர்வுபெற்றிருந்தமையும் குலக்குழுவின் பெருமைக்காகவும், மானம் காப்பதற்காகவும் பெண்கள் முன்னின்றமையும் இக்கதையின் பின்னணியில் மனங்கொள்ள வேண்டியவை. வன்னிநாச்சியார்களின் வீரவரலாறும், சாதனைகளும்கதைமரபுகளும்போல வேஅரியாத்தையின் பின்னணியில்பெண்ணுரிமைச்சமுதாயத்தின் சமூக அந்தஸ்தும் விரிவாக ஆராயப்படவேண்டும். கேரளநாட்டுப் பணிக்கர் இனத் தாய்வழிச் சமூகப் பின்னணியும் இணைந்து நோக்கப்படவேண்டும்.

முள்ளியவளைப் பிரிவிலுள்ள குமாரபுரப் பகுதியில் குமுளமுனை என்ற இடமுண்டு! இப்பிரதேசத்திலுள்ள பெரிய வெளியில் கண்டல் என்ற இடமுண்டு. இதனைக் கொம்பன் படுத்த கண்டல் எனக் கூறுவர். இப்பகுதியிலேயே இச்சம்பவம் நடைபெற்றிருக்க வேண்டும். குறிப்பாக பழைய விளாங்குளம், புதுக் குடியிருப்பு, [illegible] ஆகிய வன்னிமைகளைச் சேர்ந்தோர் ஒல்லாந்தருக்கு யானைத் திறை கொடுத்துவந்தனர்.

வன்னிப் பிரதேசத்துப் பணிக்கர்களின் யானை பிடிக்கும் வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் 1883 ம் ஆண்டு ஜி. எம். பௌலர் G. M.Fowler என்பவர் வாய்மொழியாக அறிந்து பதிவு செய்துள்ளார். றோயல் ஆசிய சங்கத்தில் இக் கட்டுரை படிக்கப்பட்டது. பணிக்கர் குலமுதியவர் ஒருவரிடம் பெற்ற அத்தகவல்களின் விடரங்கள் வேலப்பணிக்கர் ஒப்பாரியில்வரும் நம்பிக்கைகளையும், நிகழ்ச்சிகளையும் விளங்குவதற்கு ஆதாரமாக அமைவது குறிப்பிடத்தக்கது.

யானையை அகப்படுத்தும் வகையில் முதலாவதாகக் கயிறெறிந்து முடிச்சிடும் வல்லமை வாய்ந்தவனே பணிக்கன் என்ற பெயரால் அழைக்கப்பட்டான். யானை கூட்டமாக நிற்குமிடத்துக்குச் சென்று பல்வேறு ஒலிகளை எழுப்பி அவற்றைக் கலைந்து செல்லச் செய்து பின்னர் முடிச்சுக் கயிற்றினை எறிந்து யானைகளை அகப்படுத்துவர்.

பணிக்கர் குழு யானைபிடிக்கச் செல்வதற்கு முன்னர் அண்ணாவிகள் என அழைக்கப்படும் மந்திரவாதிகளிடம் நிமித்தம் கேட்டு நற்குறிபார்த்துச் செல்வார்கள். அண்ணாவிக்கு அர்ப்பணமாக தேங்காய், அரிசி, பணங்கட்டிக்குட்டான், வெள்ளைக் கோழி ஆகியன கொடுக்கப்படும், தானப்பொருட்களை வைத்து மந்திரம் செபம் முடிந்த பின்னர் யானைகளைச் சூழ்ந்திருக்கும் தெய்வங்களை நம்பப்படும் காளி, கறுப்பன், வேடறி, வீரபத்திரன், நரசிங்கவைரவர், ஆகிய தெய்வங்கள் தேவை நோக்கி அழைத்துக் காட்டிலேயுள்ள பிரண்டைக் கொடியை, வட்டவடிவமாக இட்டு யானை பிடிக்கச் செல்லும் பணிக்கரைச் சூழ நிற்க வைத்து அண்ணாவி தேங்காய் சிதறடிப்பான். தேங்காய் சரி பாதியாக உடைந்தால் ஆண் யானை அகப்படும் அல்லது தவறி உடைந்தால் பெண்யானை அகப்படும் என்பது நம்பிக்கை. தேங்காய் சிதறினால் அவலம் விளையும் என யானை பிடிக்கும் காலத்தைப் பிற்போடுவர்.

மந்திர தந்திரங்களால் யானை பிடிக்கச் செல்வதற்கு பிறர் தடைகள் செய்வர் என்பதனால் செல்லும் நேரம், பாதை இரகசியமாகவே வைத்திருப்பர் பிறர் அறியாது செய்வதே வழக்கம் (முத்துக் குளிக்கச் செல்வோரிடையேயும் இவ்வகை வழக்கம் நிலவியது)

பலவிதமாக யானை பிடிக்கச் செல்வோரை கட்டும் வழக்கம் நிலவியது காசினை சீலையில் முடிந்து யானை பிடிக்கச் செல்லும் பணிக்கரின் வீட்டுக் கூரையில் இரகசியமாகச் செருகுதல். இதனை இழைகட்டுதல் என்பர், யானை பிடிக்கச் செல்லும் பணிக்கரின் தடத்தினைக் கண்டு காலடையாளத்தையும் பிரண்டைக்கொடியினாலே வட்டித்து மந்திரித்தால் யானை அகப்படாது வீணலைச்சல் ஏற்படும். இதனை விடக் காளி கறுப்பன் முதலிய தேவதைகளை ஏவி விடுவர் என்ற பயமும் பணிக்கர் மத்தியில் நிலவியது இதனால் காவல் செய்து போவதையே வழக்கமாகக் கொண்டனர்

ஏழு பாக்கு, ஏழு வெற்றிலை, கற்பூரம், நெல்லுப் பொரி, புல்லுக்கொண்டையால் செய்யப்பட்ட விளக்குட்டி ஆகியனவற்றை மந்திரித்து ஒரு கறுப்புக் கோழியையும் பாதைத் தடம் அறிந்து பலியிட்டால் யானை பிடிக்கச் சென்றவரும், அகப்பட்ட யானையின் வாயினாலும் மூக்கினாலும் இரத்தம்வடிந்து இறப்பர். இவ்வாறான மாந்திரீகச் செயல்கள் யானை பிடிப்போர் மத்தியில் நிலவியது. இவ்வொப்பாரியில் வரும் சம்பவமும் இவ்வகை பின்னணியைக் கொண்டதாக இருக்கலாம் அரியாத்தையும், யானையும் இறந்தமையும் ஐயங்காச்சிப் பட்டதுவோ, பெல்லிப்பேய் ஏவினதோ என்ற தொடர்களும் குறிப்பிடத்தக்கன. அரியாத்தை வெற்றிலை பாக்கில் நஞ்சூட்டப்பட்டு இறந்தாள் என்ற வாய்மொழி மரபும் உண்டு.

யானை பிடித்து வந்தபின்னர் முதலிலே பூசைக்கு என நிவேதிக்கப்பட்ட வெள்ளைக் கோழி பலியிடப்படும். நிவேதித்து வைத்த பணங்கட்டி, தேங்காய் பழுதடைந்தால் யானை குருடாகும் என்ற நம்பிக்கையும் நிலவியது. நல் நிமித்தத்துக்கு வெள்ளைக் கோழியும், தீயசக்திக்குக் கறுப்புக் கோழியும் பலியிடும் வழக்கமும் நோக்கத்தக்கது

சுருங்கக் கூறின், அரியாத்தை என்ற பெண்ணின் மரண நிகழ்ச்சி சமூக நிகழ்ச்சியாக மாறி அதனால் ஏற்பட்ட அவலத்தை புலப்படுத்தும் வகையில் இந்த ஒப்பாரி வன்னிப்பகுதியில் எழுந்திருக்க வேண்டும். இதன் பின்னணியில் வன்னிப் பகுதியில் நிலவிய பெண்ணுரிமைச் சமுதாயத்தின் நிலையும், கற்பு, வீரம், சமய நம்பிக்கை, சடங்குகள், வழக்குகள் ஆகியன சமூகவியலாளர் ஒருவரின் கவனத்தை ஈர்க்க வல்லன. இவை பற்றிய ஆய்வுகள் விரிவாக நிகழ்த்தப்பட வேண்டும். அதுவே இந்நூல் வெளிவந்ததன் பயன்பாடாகும்.

# ‘இறக்குமதிகொள்கையினால் தமிழ் விவசாயிகள் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

‘‘அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையினால் தமிழ், விவசாயிகளும், வடகிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்ப்பகுதிக் கைத்தறி நெசவாளர்களுமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் இளைஞர் பேரவையினர் எமது பிரதேச கைத்தறி நெசவு உற்பத்திகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்துவருவதை பாராட்டாமல் இருக்க முடியாது, தமிழ்மக்கள் இவர்களின் சேவைக்கு ஆதரவு நல்கி ஒத்துழைப்பு அளித்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்’’

இவ்வாறு மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலயத்தில் தமிழ் இளைஞர் பேரவையினரால் அமைக்கப்பட்ட கைத்தறி நெசவு ஆடைகளின் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில், மானிப்பாய் திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார் திரு ப. இறைகுமாரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. தர்மலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

‘‘கிழக்கு மாகாணத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களிடமிருந்த கைத்தறி ஆடைகளை கொள்முதல் செய்து வடபகுதியிலுள்ள தமிழ் மக்களுக்கு தமிழ் இளைஞர் பேரவையினர் விற்பனை செய்வதன் மூலம் வடக்கு-கிழக்கு மாகாண மக்களிடையே ஒரு புதிய இணைப்பை ஏற்படுத்தியுள்ளனர். அத்துடன் அரசின் கட்டுப்பாடற்ற இறக்குமதிகளினால் எமது பகுதி உள்ளூர் உற்பத்திகள் கால வெள்ளத்தில் அழிந்துபோகவிடாது அவற்றின் மகத்துவத்தை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் பணியையும் இளைஞர்பேரவை ஆற்றி வருகின்றது. இந்த விற்பனை ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்தில் சுமார் 30 ஆயிரம் ரூபாவுக்கு கைத்தறி ஆடைகள் விற்பனை செய்யப்பட்டிருப்பது தமிழ்மக்கள் இம்முயற்சிக்கு அளித்துவரும் பேராதரவை காட்டுவது என்றால் மிகையாகாது’’ என்றார்.

## நாடும் நடப்பும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
பணிப்பாளருக்கு எழுதியுள்ளாராம்.

பன்னிரண்டாவது நினைவூட்டற் கடிதத்துக்காவது பதில் கிடைக்குமா?

-- ஊர்சுற்றி

## உயரப்பறந்த...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
சிக்கு கைமாறியுள்ள சிம்பாப்வேயில், பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டு சிம்பாப்வே தேசியக்கொடி ஏற்றப்பட்டு சுதந்திரமாக பறக்கவிடப்பட்டிருந்தது.

ஆபிரிக்காவில் மற்றுமொரு சுதந்திர நாடாக மலர்ந்த சிம்பாப்வேயின் புதிய அரசியலமைப்புப் பத்திரத்தை இளவரசர் சாள்ஸ், புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள வணபிதா பனானாவிடம் கையளித்தபோது 21 பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டன

பிரதமர் திரு. றொபேர்ட் முகாபே நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் எனை அன்று வெறுத்த நீங்கள் இப்போது ஆதரிக்கிறீர்கள் என்று கூறினார். (கு)


# புறேற்றினெக்ஸ்

# புரதச்சத்து நிறைந்தது




இளம் பிள்ளைகளின் தசை நார், எலும்பு, மூளை ஆகியவற்றை விருத்தி செய்வதற்குத்தேவையான புரதச் சத்தும், நோய்கள் வராமற் தடுக்கும் சக்தியும் கொண்ட புறேற்றினெக்ஸ், விற்றமின்களும் கனிப்பொருட்களும் நிறைந்தது.

இன்றே ஒரு போத்தல்

**புறேற்றினெக்ஸ்**

வாங்குங்கள்

சில்லறை விலை

50 கிறம் - ரூ. 10.20

125 கிறம் - ரூ. 20.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிரச்னைகள் தீர்க்கப்படுகின்றன

'ஊடுருவி'

● க. திருஞானசம்பந்தர் (உதவிச் செயலாளர்) அராலி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.

பிரச்னை: (உலோலசிட்டி பிள்ளையார் ஆலயத்தை தனிப்பட்ட பரிபாலனத்திடமிருந்து பொதுபரிபாலனத்திற்குக் கொண்டுவருதல் சம்பந்தமான விவகாரம்)

தீர்வு: 25-3-80 பதிவுத் தபால் மூலமும் 6-4-80, 16-4-80 சாதாரணத் தபால்மூலமும் அனுப்பப்பட்ட நீண்ட கடிதங்களும் விளக்கங்களும் அதுசம்பந்தமான துண்டுப்பிரசுரங்களும் கிடைக்கப்பெற்றோம். உங்களின் நியாயமான கோரிக்கை குறித்து முழுவிபரங்களும் அறிந்துகொண்டோம். இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுத்து, நீதிகிடைக்க வழிசெய்யுமாறு கோரி, உங்களின் கடிதங்களையும் இணைத்து இந்துசமய விவகார அமைச்சர் திரு, செ. இராசதுரைக்கு அனுப்பிவைத்துள்ளோம். தவிர, இவ்வருடம் ஜனவரி மாதம் 26ம் திகதி நடைபெற்ற அராலி மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க விசேட கருத்தரங்கில் உலோலசிட்டி பிள்ளையார் ஆலய விவகாரமும் முக்கிய இடம்பெற்று விவாதிக்கப்பட்டு, அன்றையகருத்தரங்கில் (உங்களின் துண்டுப் பிரசுரப்படி) வட்டுக் கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவும் கலந்துகொண்டிருப்பதால் அவருடனும் இதுசம்பந்தமாகத் தொடர்பு கொண்டுள்ளோம். சிலதினங்கள் பொறுத்திருங்கள்.

● வே. ஸ்ரீகிருஷ்ணராசா. என். எம். லேன், பருத்துத்துறை

பிரச்னை: கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைகளின் பெறுபேறுகள் எப்பொழுது வெளிவரும்?

தீர்வு: இன்று வெளிவந்திருக்கவேண்டும் தவறினால் திங்கட்கிழமை முடிவுகள் வெளியாகிவிடும்.

● எம். கே மகேந்திரன், தும்பளை, பருத்தித்துறை.

பிரச்னை: விண்வெளிப் பயணவியல் பற்றி கற்றுக்கொள்ளவிரும்புகின்றேன். இதுசம்பந்தமாக NASA நிறுவனத்துடன் தொடர்புகொள்ள விலாசம் தருவீர்களா?

தீர்வு: National Aeronautics and Space Administration (NASA), 400 Maryland Avenue, SW 20546, Washington DC, US

● எஸ் ஆர். சித்திரா, கந்தசுவாமி கோவிலடி, நல்லூர்.

பிரச்னை: (சோவியத் தூதரக வெளியீடுகள் சம்பந்தப்பட்டவை.)

தீர்வு: உங்கள் பிரச்னை சம்பந்தமாகக் கொழும்பிலுள்ள சோவியத் தூதரகத் தகவல் பகுதியினருக்கு எழுதியுள்ளோம். அவர்கள் உங்களுடன் தொடர்புகொள்வார்கள்.

● இ. வசந்தாதேவி, கந்தசுவாமி கோவிலடி, கோப்பாய் வடக்கு.

பிரச்னை: (ஜி.ஸி.ஈ சாதாரணப் பரீட்சை- ஆகஸ்ட் சம்பந்தப்பட்டது)

தீர்வு: உங்களுக்கு உதவ முடியாமைக்கு வருந்துகிறோம். நீங்கள் எதிர்பார்ப்பதுபோல், விண்ணப்பத் திகதியை (அவ்வளவு சுலபமாக நீடிக்கமாட்டார்கள்.

● க. பொன்னையா, (இளைப்பாறிய அதிபர்) கரவெட்டி.

பிரச்னை: (ஆசிரியையொருவர் சட்ட விரோதமாகச் சீட்டு நடத்தி ஏமாற்றியதாகக் கூறப்படும் விவகாரம் சம்பந்தப்பட்டது.)

தீர்வு, உங்கள் பிரச்னை குறித்து, வடமாநிலக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டுள்ளோம். அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் பலாபலன்கள் குறித்துப் பின்னர் இப் பகுதியில் அறிவிக்கப்படும்.

> 'எங்கள் பிரச்னை'
> C/o 'ஈழநாடு'
> த. பெ. எண்: 49,
> யாழ்ப்பாணம்.

● ஆர். சிவநேசன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பிரச்னை: கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் 'விசா' பெற்றுச் செல்பவர்களும் சிலவேளை லண்டனில் தரையிறங்கியவுடன் திருப்பி அனுப்பப்படுகின்றார்களே! இது அநீதியான முறை இல்லையா?

தீர்வு: கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் வழங்கப்படுவது 'விசா' இல்லை. Entry Visa தான் (நுழைவு அனுமதி போன்றது) வழங்கப்படுகிறது இதனைப் பெற்று லண்டன் செல்பவர்கள் பொதுவாக அசௌரவப்படுத்தப்படுவதில்லை. ஆனாலும் இலங்கையில் 'என்றி விசா' பெற்றுச் செல்பவர்கள் அதே காலப்பகுதி 'விசா' தான் லண்டனிலும் வழங்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது! காலப்பகுதி அதிகரிக்கலாம் அல்லது குறைக்கப்படலாம். அதனைத் தீர்மானிக்கும் பொறுப்பு அக்கரை அதிகாரிகளையே சார்ந்தது! தவிர, அவர்கள் விமானநிலையத்தில் மேற்கொள்ளும் 'விசா' சம்பந்தமான அனுமதி அல்லது நிராகரிப்பு முடிவுகளுக்கு எதிராக அங்கு 'அப்பீல்' செய்யவும்முடியாது என்பதனையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்!

● க. விக்கினராசா, முள்ளானை, இளவாலை.

பிரச்னை: நான் குண்டசாலை விவசாய 'டிப்புளோமா' பயிற்சியை முடித்துவிட்டு தற்போது விவசாய ஆசிரியராகப் பணியாற்றிவருகிறேன். எங்களுக்கு கல்வி இலாகா, தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்களுக்கு வழங்கும் வேதனத்தையே வழங்கி வருகிறது. ஆனால் டிப்புளோமா பயிற்சிபெற்ற வேறு பலருக்குடிப்புளோமாவிற்குரிய வேதனம் வழங்கப்படுகிறது எனக்கும் என்போன்ற பயிற்சி பெற்றவர்களுக்கும் கல்வி இலாகா தராதரப்பத்திரமற்ற ஆசிரிய வேதனத்தையே வழங்கிவருகிறது இதனை தீர விசாரித்து, எமக்கும் 'டிப்புளோமா' வேதனம் கிடைக்க வழிசெய்யுங்கள்.

தீர்வு: நீங்கள் உடனடியாக கல்வி இலாகா (கொழும்பு)வுடன் தொடர்பு கொள்ளவேண்டும். அங்கு அனுப்பப்படும் உங்கள் கடிதத்துடன்; நீங்கள் எந்த வருடத்தில் பயிற்சி முடித்தீர்கள், சித்தியடைந்ததற்கான சான்றிதழ்ப் பத்திரத்தின் புகைப் படப்பிரதி, மற்றும் உங்களின் கோரிக்கையை நியாயப்படுத்த உதவும் தஸ்தாவேஜுகள் ஆகியவற்றையும் இணைத்து அனுப்புங்கள். அனுப்பும் பொழுது எமக்கும் உங்கள் கடிதத்தின் பிரதி ஒன்றை அனுப்பிவையுங்கள்.

**ஒரு குறிப்பு:**

தவிர்க்க முடியாத காரணங்களினால், கடந்த வாரம் நாம் அறிவித்ததற்கிணங்க இவ்வாரம், வேலைவாய்ப்பு பற்றிய யாழ். அரச அதிபரின் விளக்கத்தை இங்கு வெளியிட முடியவில்லை. அடுத்தவாரம் நிச்சயம் இங்கு வெளியிடப்படும் என்பதை. வாசகர்கள் கவனத்திற்கொள்ளவும்

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் மீனாட்சி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. பதினொரு தினங்கள் தொடர்ந்து உற்சவம் நடைபெறும்.

இம்மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை ரதோற்சவமும் அடுத்தநாள் செவ்வாய்க் கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

(கொ-அ)

## கணவனைப் பிரிந்து வாழ்ந்தவர் தற்கொலை!

(நெல்லியடி)

கணவனைப் பிரிந்து 3வருட காலம் பெற்றோர்களுடன் வசித்து வந்த இளம் பெண் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் கரவெட்டி கிழக்கு தளவில் என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது மகேஸ்வரி குமாரவேலு என்னும் 25 வயதுள்ள பெண்ணே இவ்வாறு மரணமானவராவார்.

பருத்தித்துறையில் நீதவான் திரு. கே கே. பாலசுப்பிரமணியம் முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது, பருத்தித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர், காலஞ்சென்ற பெண்ணின் தந்தை சின்னத்தம்பி தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

"எனக்கு எட்டுப் பிள்ளைகள் உண்டு. காலஞ்சென்றவர் திருமணத்தின் பின்னர் பிரசவத்திற்காக எமது வீட்டிற்கு வந்தார். உயிரற்ற சிசுவைப் பிரசவித்த அவர் மீண்டும் கணவனைச் சென்று கணவருடன் வாழ விரும்பவில்லை அவரது கணவரும், நாமும் புத்திமதிகள் சொல்லியும் இணங்கவில்லை. கடந்த 3வருட காலமாக எம்முடனேயே வசித்து வந்தார். சம்பவதினம் தான் நச்சுத்திராவகம் குடித்து விட்டதாகக் கூறினார். எமக்குப் பாரமாக இருக்க விரும்பாத காரணத்தினாலேயே எனது மகள் தற்கொலை முயற்சியில் இறங்கியிருப்பார் என எண்ணுகிறேன்." என்றார். விசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது,

## "கலை, இலக்கியத்துக்குதொண்டாற்றும் கலைமன்றம்"

(யாழ்ப்பாணம்)

"கடந்த பல ஆண்டுகளாக கலை, இலக்கியத்துறைக்கும், கிராமிய யுவதிகளின் தொழில் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டுவரும் ஞானசம்பந்தர் கலைமன்றத்தையும் அதன் ஸ்தாபகர்களையும் மனந்திறந்து பாராட்டவேண்டும். இவர்களது அரியமுயற்சியால் கடந்த ஆண்டில், பட்டயக் கணக்காளர் திரு.சோமசுந்தரம் தையல் மெஷின் ஒன்றை அன்பளிப்புச் செய்தார். இம்முறை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வேலும்மயிலும் ஒரு தையல்மெஷினை அன்பளிப்புச் செய்தார். எதிர் வரும் ஆண்டில் இப்பகுதி மக்கள் ஒரு மெஷினை அன்பளிப்புச்செய்யவேண்டும் என்று விரும்புகின்றோம்"

இவ்வாறு திரு. நெல்லை க. பேரன் பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் ஆண்டுவிழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

நாடகங்கள் பற்றி அவர் பேசுகையில், "நல்ல கருவும் உருவும் கொண்ட சிறந்த நாடகங்களை எமது இளைஞர்கள் தயாரித்து அரங்கேற்றவேண்டும். உதாரணமாக அ. தாசீசியசின் 'பொறுத்ததுபோதும்' போன்ற நாடகங்களை நீங்கள் பார்த்தால் நல்ல நாடகம் எது என்பதை உணர்வீர்கள். சதாவதானி கதிரவேற்பிள்ளை சன சமூக நிலைய விழாவில் இந்த நாடகத்தைப்பார்க்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்துள்ளது. வெறும் நகைச்சுவை நாடகங்களால் பிரயோசனம் இல்லை. கருத்தான நாடகங்களே இன்று தேவை" என்றார்.

திரு. சோமசுந்தரம் பேசுகையில், "மாணவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழவேண்டும். வருங்காலம் அவர்களுடைய கைகளில்தான் தங்கியுள்ளது" என்றார்.

(6ம் பக்கம் பார்க்க)

## நல்லூரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவு உற்பத்தியை பெருக்க விரும்புகிறார்,

மகாவலி சிரமதான இயக்கத்தில் யாழ்ப்பாணத்து தமிழ் மக்கள் பங்கு கொள்வதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள பிரச்னைகளை அறிய முடியும். அப்பகுதி அபிவிருத்தி பற்றியும் அறிய முடியும்.

தமிழ்ப்பகுதி மக்கள் தென் பகுதிக்குச் சென்று சிரமதானப்பணிகளை மேற்கொள்ளுவது போல் தென்பகுதி மக்களும் வடபகுதிக்கு வரவழைக்கப்படுவர். அதன் மூலம் தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் சகோதரத்துவத்தையும் நெருங்கிய பிணைப்பினையும் ஏற்படுத்த முடியும் (கொ-இ)

## உணவு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இதனைத்தொடர்ந்து சிறீஸ்கந்தராசா கைது செய்யப்பட்டார். அவரை விசாரணை செய்த யாழ் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பிரேமதாசா, கான்ஸ்டபிள் திரு மாவத்த ஆகியோர் சந்தேக நபருடன் கொழும்புக்குச் சென்றனர். சந்தேக நபர் கொடுத்த தகவலின்படி புறக்கோட்டை நடைபாதை வியாபாரியான வர்ணகுலசூரியாவிடமிருந்து கமராவை கைப்பற்றினர்.

கமராவின் 'பிளாஷ்' அதே இடத்தைச்சேர்ந்தகுணரத்தின என்பவருக்கு விற்கப்பட்டது என தெரியவந்ததாயினும் அந்நபர் தலைமறைவாகிவிட்டார் என்றும் வர்ணகுல சூரியா புறக்கோட்டைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு பிணையில் விடப்பட்டார் குணரத்தின தேடப்பட்டு வருகிறார். (கொ-இ)


சில நிமிட நேரத்துக்குள்ளாகவே பூச்சி, புழுக்களைக்கட்டுப்படுத்தும் அற்புத சக்திவாய்ந்த சர்வபூச்சிநாசினி

பரத்தியன் 6/3

மிளகாய், வெங்காயம், நெல், காய்கறி, மற்றும் எல்லாப் பயிர்களையும் பாதிக்கும் சகல பூச்சி புழுக்களையும் உடனே கட்டுப்படுத்தி நீடியகாலம் தங்கும்தன்மையுடைய 'பரத்தியன்' 6/3

★ மிகவும் சிக்கனமானது ★ சக்தி வாய்ந்தது

கிடைக்குமிடம்:
அக்ரேஸ் லிமிட்டெட்
59, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்கள்:
ஜெகெம்
39, [illegible] பில்டிங், 31, [illegible] வீதி, கொழும்பு 1. தொலைபேசி: [illegible]




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### தி.மு.க. - இ. காங்கிரஸ் பேச்சுவார்த்தை இடைநிறுத்தம்:

# தமிழக முதலமைச்சர் யார்?

## கட்சிகளிடையே கருத்து வேற்றுமை

சென்னை, ஏப்ரல் 18

நடைபெறவிருக்கும் தமிழக சட்டசபைத் தேர்தலில் தி. மு. க. - இந்திராகாங்கிரஸ் கூட்டணி வெற்றிபெற்றால் யார் முதலமைச்சராவது என்பது தொடர்பாக இரு கட்சிகளுக்குள்ளும் கருத்துவேறுபாடு தோன்றியுள்ளது.

இக் கருத்துவேறுபாடு காரணமாக தொகுதிகளைத் தெரிந்தெடுப்பது தொடர்பாக நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முடிந்தபின்னரே முதலமைச்சர் யார் என்பது பற்றி முடிவெடுக்கவேண்டும் என்று இந்திராகாங்கிரஸ் தலைவர்கள் கருத்துக்கொண்டிருக்கும் அதேவேளையில் தி. மு. க. வோ இப்போதே முடிவெடுத்துவிடவேண்டும் என்று பிடிவாதமாகவே இருந்துவருகிறது.

### கூட்டணி முறியாது

தமிழகதேர்தல் நடவடிக்கைகளை கவனிப்பதற்காக இந்திரா காங்கிரஸால் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ரமகோபால் ரெட்டி இப் பிரச்னை தொடர்பாக கருத்துவெளியிடுகையில் "அடுத்த முதலமைச்சர் பிரச்னையை தி. மு. க தான் கிளப்பியது. அப் பிரச்னையால் தி மு க - இந்திரா காங்கிரஸ் கூட்டணி முறியும் என்ற பேச்சுக்கே இடமில்லை. இம் மாதம் 21ம் திகதி தம்மைச் சந்திக்குமாறு திருமதி இந்திராகாந்தி கருணாநிதியைக் கேட்டுள்ளார் அன்று இப் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படும் என்றார்.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியிடம் நிருபர் ஒருவர் கேட்டபோது திருமதி இந்திராகாந்தியிடமிருந்து தமக்கு எந்த அழைப்பும் கிடைக்கவில்லை என்று கூறினார். (கு)

### தூதுவர் பரிமாற்றம்

மாஸ்கோ, ஏப்ரல் 18

சுதந்திரமடைந்த சிம்பாப்வேயில் தூதுவர்களைப் பரிமாற சோவியத்யூனியன் விருப்பம் தெரிவித்துள்ளது

சிம்பாப்வேயை சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்வதாகவும் சோவியத் அறிவித்துள்ளது. (கு)

### சிம்பாப்வேயில்

# உயரப்பறந்த தேசியக் கொடி!

சாலிஸ்பரி, ஏப்ரல் 18

ஏழு ஆண்டுகள் விடுதலைப் போராட்டத்தின் பின்னர் சுதந்திரமடைந்த சிம்பாப்வேயின் சுதந்திரதின கொண்டாட்டங்கள் இன்று அதிகாலை மக்களின் மகிழ்ச்சிக் குதூகலத்துடன் கொண்டாடப் பட்டது.

சிறுபான்மை வெள்ளையரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று பெரும்பான்மை கறுப்பு இன மக்களின் ஆட்

[4-ம் பக்கம் பார்க்க

### பொருளாதாரத்தடை பயனில்லையேல்

# ராணுவ நடவடிக்கை!

## அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப்ரல் 18

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டுள்ள பொருளாதார, மற்றும் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் விநியோகத் தடைகளால் பணயக்கைதிகள் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் ராணுவநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

ராணுவ நடவடிக்கை தவிர்ந்த சகல தடைகளையும் கடந்த நள்ளிரவுமுதல் அமுல்படுத்துமாறு தமது அதிகாரிகளைப் பணித்த திரு. கார்ட்டர், இத் தடைகள் பயனளிக்காவிட்டால் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள அமெரிக்கா இனியும் யோசிக்காது என்றார்.

இதேவேளையில் ஐ. நா. சபையிலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு. ஹெவல், பணயக் கைதிகளை விடுவிப்பதற்காக ஐ நா. சபை எதையுமே செய்யாமலிருக்கிறது என்று கவலைதெரிவித்ததுடன் மூன்றும் உலகநாடுகளும் அமெரிக்காவுக்கு உதவ தவறிவிட்டன என்று தெரிவித்துள்ளார். (கு)

### "பயமுறுத்தல்களுக்கு ஈரான் அஞ்சாது"

தெஹ்ரான், ஏப்ரல் 18

ஈரானுக்கெதிராக ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அமெரிக்காவின் பயமுறுத்தலுக்கு ஈரான் ஒருபோதும் அஞ்சாது என்று மதத்தலைவர் அயத்தொல்லா கொமேய்னி கூறியுள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளைக் கண்டு ஈரானியர்கள் அஞ்சத்தேவையில்லையென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவதையே நோக்கமாகக் கொண்டு திரு. கார்ட்டர் செயல்படுவதாகக் குறிப்பிட்ட திரு கொமேய்னி, ஈரானுக்கெதிரான பழிவாங்கல் நடவடிக்கையாகவே பொருளாதாரத்தடையைமேற்கொண்டு வருகிறது" என்றார்.

பொருளாதாரத் தடையை மேற்கொண்டு வருகிறது" என்றார்.

பொருளாதாரத் தடையை கொண்டுவருமாறு ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா விடுத்துள்ள கோரிக்கையை அந் நாடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் திரு. கொமேய்னி வேண்டுகோள் விடுத்துள்ளார். (கு)

### லால்வாணி மனநோயாளி

புதுடில்லி, ஏப்ரல் 18

பிரதமர் திருமதி இந்திராகாந்தியை கொலைசெய்வதற்காக கத்தியொன்றை வீசிய இளைஞர் ராம்பூல் சந்த் லால்வாணி ஒரு மனநோயாளி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லால்வாணி தெரிவித்த தகவலையடுத்து கைதுசெய்யப்பட்ட ஐந்துநபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இத் தகவலை வெளியிட்டார். (கு)


# டியுறேல்
# அப்பிள் பழச்சுவையுள்ள, இரும்புச்சத்து நிறைந்த, பிள்ளைகளுக்கான விற்றமின் பாணி.







பூச்சிக் கோளாறு, உங்கள் பிள்ளைகளுக்குப் பெரும் சோகையை உண்டாக்கி கடும் பலவீனத்தை ஏற்படுத்தி சக்தியை இழக்கச் செய்கிறது.

இரும்புச் சத்தும், பி கொம்பிளெக்ஸும் கொண்ட பிள்ளைகளுக்கான டியுறேல், இரத்த விருத்தியை அதிகரிக்கச் செய்து, போஷாக்குக் குறைவு, பலவீனம் ஆகியவற்றை எதிர்க்கிறது.

பிள்ளைகளுக்கான டியுறேல் பாணி மதுசாரமற்றது. அத்துடன் உங்கள் பிள்ளைகள் பெரிதும் விரும்பும் அப்பிள் பழச் சுவையுடையது.

உங்களது பிள்ளை களைப்புற்று, சோர்வடைந்திருக்கும் போது மீண்டும் மெருகூட்டி சுறுசுறுப்பாக்க சக்தி செறிவும், விற்றமின்களும் கொண்ட பிள்ளைகளுக்கேயுரிய டியுறேல் கொடுங்கள். அதுவே பலவீனத்தைப் பறக்கச் செய்கிறது....

அதுவே பலம் வழங்குகிறது.

**ஒவ்வொரு கரண்டி பிள்ளைகளுக்கான டியுறேலிலும் இரும்புச்சத்து நிரம்பியிருக்கிறது.**

சில்லறை விலை 170 மில்லி ரூ. 13/75


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-லதா
ஊருக்கு உழைப்பவன்
(புதிய பிரதி)

நாகமணி (சுன்னாகம்)
தினசரி 6 45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)

6th CROWDED WEEK
REGAL JAFFNA Phone: 360
Daily 4 shows
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

ராஜா - (யாழ்நகர்) (சில தினங்கள் மட்டும்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன் நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

SANTHI JAFFNA Phone 7642
Daily 10-30, 2-30, 4-45; 7-00 & 9-30 p.m.
RECAPTURE "THE STING EXPERIENCE"
Remember how good you felt the first time
WINNER OF 7 ACADEMY AWARDS
including Best Picture in 1980.........
PAUL NEWMAN ROBERT REDFORD ROBERT SHAW IN
"THE STING"
—COLOR—ACTION PACKED MOVIE—

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-15 & 9-30
பேசி: 7698
DIAMONDS

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த் மலேசியா சிவாஜி ராஜா, டீன்குமார் நடித்த
நெஞ்சுக்கு நீதி
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்—புதிய பிரதி)
21-4-80 முதல்
மூவன் பலஸ
[புதிய வெளியீடு—சிங்களம்]

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தொலைபேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி மற்றும்பலர் நடித்த
நிறம் மாறுத பூக்கள்
(வண்ணப்படம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன்
சர்மலிங்கம்-டிங்கிரி கனகரத்தினம்-V. R. ஸ்ரீ நடராஜா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன்: ஜோ தேவ் ஆனந்த்


# இன்றைய பலன்

சித்திரை மாதம் 7-ந்திகதி

(19-4-80) சனிக்கிழமை

மேடம்: பொருள் வரவில் புதிய திருப்பம் ஏற்படுகின்றது. முதல் விட்டுச் செய்யும் தொழில் முன்னேற்றத்தைக் குறிப்பிடுகின்றது. வெளியூரில் இருந்து மகிழ்ச்சிகரமான செய்தி ஒன்றும் கிடைக்கும்.

இடபம்: வாய்வுக் கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம். உணவு விஷயத்தில் சுகாதாரம் வேண்டும். தானிய நஷ்டத்துக்கு இடம் உண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மிதுனம்: அவசர முடிவின் மூலம் ஆபத்தை விலைகொடுத்து வாங்குவீர்கள். மனதில் அமைதி குன்றும். அயலவர்களின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும். அடக்கம் விரும்பத்தக்கது.

கடகம்: இனிக்கப்பேசி காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். மேடைப்பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர். ஆதாயத்திலும் அபிவிருத்தி தென்படும். அரசியலாரின் கவனமும் உங்கள் பக்கம் திரும்பும்.

சிங்கம்: சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். செய்தொழிலால் நஷ்டம் ஏற்படலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று. சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம் சுகாதாரம் வேண்டும்.

கன்னி: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக் கூடும். விவசாயிகளாயின் ஏமாற்றத்துக்கு இடமுண்டு. நிதானம் நன்று.

துலாம்: அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபடுவீர்கள். விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதிர்பாராத பணம் கைக்கு கிடைக்கலாம்.

விருச்சிகம்: ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். பூமிப் பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும். தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறு பிணிக்கும் இடமுண்டு. பொறுமை நன்று.

தனுசு: காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான சம்பவங்கள் இடம் பெறும். களஸ்திர வழியால் பொருள் வரவுக்கு இடம் ஏற்படும். பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும். கண்ணியமான தினம்.

மகரம்: செய்தொழிலில் சிரமங்கள் தோன்றக் கூடும். உடல் நலமும் சிறிது பாதிக்கப்படலாம். நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரிவிடுவதற்கு முனையக் கூடும். அவதானம் வேண்டும்.

கும்பம்: உள்ளப்பதிதாவில் உவகை துள்ளும். பத்திரிகைத் துறையில் தொழில் புரிவோர் பாராட்டுதல்களைப் பெறுவர்.

மீனம்: வித்தையில் வெற்றி காணுவீர். வேண்டியது கிடைக்கும். பொதுமக்கள் தொடர்புடன் புகழ் வந்து சேரும்

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்
(இரட்டைவேடம்)
பட்டிக்காட்டு ராஜா
(புதிய பிரதி)(கலர்)


# அமைச்சின் ஆதரவுடன் விளையாட்டு, கலைவிழா

(மட்டக்களப்பு)

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் மாபெரும் விளையாட்டு விழாவும், கலை விழாவும் இடம்பெறவுள்ளன.

இவ்வைபவத்தில் சங்கீத மோட்டார் சைக்கிள் ஓட்டம், ஆண்-பெண் மரதன், சைக்கிள் ஓட்டம், விநோதஉடை, அழகு ராணிப்போட்டி. நீச்சல், படகு ஓட்டம் உட்பட பல விளையாட்டுப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை, மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு. ரீ. கனகரத்தினம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக இவ்வைபவத்தில் கலந்துகொள்வார்கள்.

வயாவிளான் ச. ச. நி.

# கரபந்தாட்ட கால்-அரை இறுதிப்போட்டிகள்

(பலாலி)

வசாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்தச் சுற்றுக் கேடயத்திற்கான மின்னொளி கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதிப் போட்டிகளும், அரை இறுதிப் போட்டிகளும் இன்றும் நாளையும் நடைபெறுகின்றன. இறுதிப் போட்டிகள் செவ்வாயன்று இடம் பெறும் 123 கோஷ்டிகளிடையே நிலைய மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்றுவந்துள்ளன.

## இன்றைய போட்டிகள்

இன்றைய போட்டிகள் இரவு 7-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. ஓவர்-கேம் 6 வீரர் கால் இறுதிப் போட்டிகளில் தெல்லிப்பழை - வீனஸ் வி. கழகத்தை எதிர்த்து சிறுப்பிட்டி-ஜனசக்தி வி. கழக 'A' யும், 7-30 க்கு நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாணம்-வட பிராந்திய போக்கு வரத்துச்சபை வி. கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி - நவஜீவன்ஸ் வி. கழக 'B' யும் போட்டியிடும். இவ்விரு கால் இறுதிப் போட்டியிலும் தெரிவாகும் இரு கோஷ்டிகளும் இரவு 9-00 க்கு இடம் பெறும் அரை இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும்.

ஓவர்-கேம் 4 வீரர் போட்டியில் இரவு 8-00 க்கு உடுப்பிட்டி - நவஜீவன்ஸ் வி. கழக 'A' யை எதிர்த்து சிறுப்பிட்டி ஜனசக்தி வி. கவும், இரவு 8-30 க்கு உடுப்பிட்டி - நவஜீவன்ஸ் வி. கழக 'B' யை எதிர்த்து யாழ்ப்பாணம்-வட பிராந்திய போக்கு வரத்துச் சபை வி. கவும் போட்டியிடும். இவ்விரு கால் இறுதித் தேர்விலும் தகுதி பெறும் இரு கோஷ்டிகளும் இரவு 9-30 க்கு அரை இறுதிப் போட்டியில் மோதும்.

செற்-அப் ஆட்டத்தின் காங்கேசன்துறை-ஐக்கிய வி. கழக 'A' யை எதிர்த்து யாழ்ப்பாணம் - வட பிராந்திய போக்கு வரத்துச்சபை வி கழகம் போட்டியிடும். சகல போட்டிகளினதும் கால் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம்-வட பிராந்திய போக்கு வரத்துச்சபை வி. கழகம் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

## நாளைய போட்டிகள்

நாளை ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும் போட்டிகள் இரவு 7-00 க்கு ஆரம்பமாகின்றன. ஓவர்-கேம் 6 வீரர் போட்டியில் நீர்வேலி-ஐக்கிய வி. கவை எதிர்த்து புத்தூர்-உதயசூரியன் வி. கவும், இரவு 7-30 போட்டியில் உடுப்பிட்டி-சிவகுமரன் வி. கழக 'A'யை எதிர்த்து திருநெல்வேலி-சிவன் வி. கவும்போட்டியிடும் இவ்விரு கால் இறுதித் தேர்விலும் தகுதி பெறும் இரு கோஷ்டிகளும் இரவு 9-00 க்கு இடம் பெறும் அரை இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும்.

ஓவர்-கேம் 4 வீரர் போட்டியில் இரவு 8-00 க்கு இளையாலை - இளைஞர் கழக 'B' யை எதிர்த்து நீர்வேலி-ஐக்கிய வி. கவும், இரவு 8-30 போட்டியில் உடுப்பிட்டி - சிவகுமரன் வி. கழக 'A' யை எதிர்த்து திருநெல்வேலி-சிவன் வி. கவும் போட்டியிடும். இவ்விரு கால் இறுதிப் போட்டிகளிலும் தெரிவு செய்யப்படும் இரு கோஷ்டிகளும் இரவு 9-30 க்கு இடம் பெறும் அரை இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும்.

தொடர்ந்து இடம் பெறும் செற்-அப் ஆட்டத்தில் காங்கேசன்துறை-பொலிஸ் வி கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை- ஐக்கிய வி. கழகமும், இரவு 11-00 மணி போட்டியில் மட்டுவில் வி. கழகத்தை எதிர்த்து அச்சுவேலி- ஸ்ரீ விக்னேஸ்வரா வி. கழகமும் போட்டியிடும். (ஈ)

# விளையாட்டுப் போட்டி

(நெல்லியடி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கழகங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் உதவி அரசாங்க. அதிபர் திரு வீ. வேலுப்பமயிலும் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் திரு. டபிள்யூ. எஸ். சாமுவேல் அதிபர் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

# கிறீஸ் கத்தியுடன் கைது

(பண்டத்தரிப்பு)

தடைவிதிக்கப்பட்ட ஐந்து அங்குல நீளமுடைய கிறிஸ்கத்தியொன்றைச் சட்டவிரோதமான முறையில் தமது இடுப்பில் செருகிவைத்திருந்ததாகக் குற்றம்சாட்டி அராலி தெற்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை நேற்று சங்கானைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

அராலி தெற்கில் நடைபெற்ற சம்பவம் ஒன்றை விசாரிக்க சங்கானைப் பொலிசைச்சேர்ந்த கான்ஸ்டபிள் டி. ஜீ றொபின்சன் சென்ற போது பிரஸ்தாபஇளைஞரான சின்னத்துரை யகேந்திரன் என்பவர் கையில் மேற்படி ஐந்துஅங்குல நீளமுடைய கிறிஸ் கத்தியுடன் நிற்கக் காணப்பட்டாராம் பொலிசாரைக் கண்ட அந்த இளைஞர் கிறிஸ்கத்தியைத் தமது இடுப்பில் அவசர அவசரமாகச் செருகி மறைத்தாராம். இதை நன்கு அவதானித்த பொலிஸ்காரர் அந்தக் கிறிஸ்கத்தியைக் கைப்பற்றியதுடன் இளைஞனையும் கைதுசெய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர். (அ)

# சிரணி உற்சவம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம்நாளை ஞாயிற்றுக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இம்மாதம் 29 ம் திகதி தேர் உற்சவமும், அன்றுமாலை தீர்த்தமும் நடைபெறும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரிக்கோ வுக்கு வேறு கிளைகள் இல்லை

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## தி. மு. க. இ. காங். பேச்சு இன்றும் இல்லை

சென்னை, ஏப். 18

தி. மு. க இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்குள் அடுத்த முதல் அமைச்சர் யார் என்பதில் எழுந்துள்ள சர்ச்சை காரணமாக இரு கட்சித் தலைவர்களிடையே இன்றும் 2வது நாளாக பேச்சுவார்த்தை நடைபெறவில்லை.

அ தி மு க - ஜனதா கூட்டணி கட்சிகள் பேச்சு நடத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...




டில்கா வாச் வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் மேல்மாடி .
404/1 , ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்.

# தமிழகத்தில் தோழமைக் கட்சிகளிடையே தொகுதிப்பங்கீட்டில்இழுபறி

## கூட்டணிகள் குலையும் அறிகுறி!

(சென்னை)

தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டிருக்கும் அதே வேளையில் கூட்டுச்சேர்ந்துள்ள கட்சிகளுக்கிடையே தொகுதிகளைப் பகிர்ந்து கொள்வதில் பலசிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

தி. மு. க இந்திரா காங்கிரஸ் கூட்டணியிலேயே இச்சிக்கல் மிகவும் வலுவடைந்து கூட்டணியே சிதறிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அ. தி. மு. க. - ஜனதா கூட்டணிக்குள்ளும் தொகுதிப்பங்கீட்டில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

### முதல் அமைச்சர் பதவியினால் சிக்கல்

இரு கட்சிகளின் தலைவர்களுக்கிடையே நடப்பதாக இருந்த பேச்சுக்கள் திட்டமிட்டபடி நடக்கவில்லை. சட்டப்பேரவைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தி. மு. க. கூட்டணி பெரும்பான்மை பெற்றால் யார் தலைமைச்சராக இருப்பது என்ற பிரச்சினையைத் தொடர்ந்து இந்தச்சிக்கல் ஏற்பட்டிருப்பதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

இரு தரப்புத் தலைவர்களும் தொலைபேசியில் பேச்சு நடத்தியதாகவும் அப்போது தி. மு. க. வுக்கு முதல்வர்பதவி கொடுக்கப்பட மாட்டாது என்பதை ஏற்றுக்கொண்டாலொழிய மேற்கொண்டு பேச்சு நடத்த இயலாது என்று இந்திரா காங்கிரஸ் தரப்பு தெரிவித்து விட்டதாகவும் கூறப்படுகிறது. இதனை அடுத்து பேச்சில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தொலைபேசியில் நடைபெற்ற பேச்சு[illegible] டில்லியில் உள்ள மேலிடத்திற்கு தமிழகத்தில் உள்ள இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் கூறியதாகச் சொல்லப்படுகிறது. தமிழகஇந்திரா காங்கிரஸ் தலைவர்கள் மேற்கொண்டுள்ள நிலை சரியானது தான் என்றும் இதை தி. மு. க. ஏற்றுக் கொள்ளாவிட்டால் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டாம் என்றும் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர்களுக்கு டில்லி மேலிடம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இந்தப்பேச்சில் சுமூக முடிவு ஏற்படா விட்டால் தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சி 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் தனியாக வேட்பாளர்களை நிறுத்தும் என்று நம்பகமாகத் தெரிகிறது. தனித்துப் போட்டியிட்டால் வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ள வேட்பாளர்கள் யார் என்பதைப் பரிசீலிக்கும் பணியைத் தனிக் கவனத்துடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. கட்சி டிக்கெட் கேட்டு வந்துள்ள மனுக்களிலிருந்து அதிக வெற்றி வாய்ப்புள்ள வேட்பாளர்களின் பெயர்களைக் கொண்ட பட்டியல் தயாரிப்பதில் இந்திரா காங்கிரஸ் அலுவலகம் ஈடுபட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

### சங்கானை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்கூட்டி வழங்க முன்வருவோருக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனவும், பிரதமரின் திட்டத்திற்கும் பணிப்புரைக்கும் அமையவே இத்தக்கடைகளை நிறுவ பட்டினசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளதெனவும் ப. ச. விசேஷ ஆணையாளர் திரு. இராசா தனிகாசலம் தெரிவித்தார். (அ)

### கலை...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

மன்றத் தலைவர் திரு. குமாரவேலு இவ்விழாவிற்குத்தலைமை வகித்தார். மாணவர்களின் விவாத அரங்கு, பாடல்கள், நாடகங்கள் முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. மன்றச் செயலாளர் திரு. க. நடனசபாபதி அனைவருக்கும் நன்றி கூறினார்.

### மரண அறிவித்தல்
#### திருமதி பாலச்சந்திரன் செல்வநாயகி

Dr. பாலச்சந்திரன் Deputy Director Animal Breeding Peradeniya) அவர்களின் அன்பு மனைவியும், சுச்சரித்தா, சுச்சந்திரா, ஜனார்த்தனன், சுரம்மியா, முரளிதரன், கிரிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற டாக்டர் செல்லையா, திருமதி சொர்ணம்மா அவர்களின் அன்பு மகளும், இருதய நிபுணர் Dr தனபாலசுந்தரம், திருமதி அருள்நாயகி இராமலிங்கம், திருமதி ஜீவநாயகி விஸ்வநாதன், டாக்டர் செ. பாலசுந்தரம், டாக்டர் ஞானேஸ்வரி பாலசுப்பிரமணியம், திருமதி கனகேஸ்வரி இராஜஇரத்தினம், டாக்டர் இராஜேஸ்வரி பத்மநாதன், ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வே. கந்தசாமி, திருமதி தங்கம்மா கந்தசாமி அவர்களின் அன்பு மருமகளும் ஆவார் அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று மாலை 4 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 5518

### மரண அறிவித்தல்
#### திருமதி தில்லையர் நாகம்மா

தெல்லிப்பளை சட்டத்தரணியும், சமாதான நீதவானுமாகிய சின்னத்தம்பி தில்லையரின் அன்பு மனைவி நாகம்மா நேற்று வெள்ளிக்கிழமை (18-4-80) சிவபதமடைந்துவிட்டார். இவர் மகேஸ்வரி, பத்மாவதி (ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி), [illegible]வீரசிங்கம், வருணகுலசிங்கம் (Brunai), ஜெயவீரசிங்கம் (Nigeria), தர்மகுலசிங்கம் (லண்டன்), சரஸ்வதி (லண்டன்) சரோஜினிதேவி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், செந்திநாதன் (மலேஷியா), சச்சிதானந்தம் (லண்டன்), சண்முகலிங்கம் (லண்டன்), யோகநாதன் (லண்டன்), கமலாதேவி, விமலாதேவி, டொரதி (Nigeria) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரமேஷ், ரேணுகா, சசிகரன், பிரபாகரன், ஆனந்தி, கணேசன், சுஜாந்தா, ரூகான் ஆகியோரின் அருமை பேத்தியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் நாளை (20-4-80) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ("தில்லைவாசா") நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பழை கொத்தியால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 5517

OUR SERVICE IS SOUND

DILKA RADIO & T. V. TECHNICIANS

202, Hospital Road, Jaffna. Phone: 8174

யாழ்ப்பாண மக்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம்

SIERA T. V. சீரா தொலைக்காட்சிப் பெட்டி

12 அங்குலம் - 24 அங்குலம் BLACK & WHITE

(நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்)

சகல விதமான ★ றேடியோக்கள் ★ தொலைக்காட்சிப் பெட்டிகள் ★ மின்சார உபகரணங்கள் ★ ரேப் றெக்கோடர்கள்

பழுதடைந்து விட்டனவா?

அனுபவமிக்க தொழில்நுட்ப வல்லுனர்களால் உடன் சீரமைத்துக் கொள்ளலாம்.

மற்றும் ரி. வி. அன்ரனு ஏரியல்கள் — றேடியோக்கள் விற்பனைக்குண்டு.

டில்கா றேடியோ அன் ரி. வி. ரெக்னிசியன்ஸ்

பஸ் நிலையத்தின் முன்பாக (மேல்மாடி)

202, ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம். — போன்: 8174

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெடு் ஆல் [illegible] யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி 6-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 19-ம் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office Sri Lanka under No GB/[illegible] The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu'
[illegible] 289

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org